[27th March 1958

Election

* 430 *Q.*—SRI S. A. M. ANNAMALAI ODAYAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the rate of travelling allowance and daily allowance paid to teachers and non-Gazetted Officers whose services are utilised for work connected with elections ; and

(*b*) the reasons for fixing different rates of daily allowance and travelling allowance for teachers and non-Gazetted Officers who are engaged in the same kind of work?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement[a] containing the information is placed on the Table of the House.

Dispensaries

* 431 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொதுஜன சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இம் மாகாணத்திலே கீழ்க்கண்ட இனங்களிலே, இப்போது எத்தனை டிஸ்பென்ஸரிகள் இருக்கின்றன ?

(1) கவர்மெண்ட் உதவிபெற்று நடத்தப்படும் டிஸ்பென்ஸரிகள்.

(2) ஸ்தல-ஸ்தாபன நிர்வாகத்தின் மூலம் நடத்தப்படும் டிஸ்பென்ஸரிகள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (i) 276.
(ii) 710

SRI P. G. MANICKAM : கவர்ன்மெண்டு உதவிபெற்று நடத்தப்படும் டிஸ்பென்சரிகளுக்கு எந்த நோக்கத்தைக்கொண்டு உதவி அளிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில டிஸ்பென்சரிகளுக்கு வைத்தியர் சம்பளம் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. சில டிஸ்பென்சரிகளுக்கு ஸ்தல ஸ்தாபனங்களால் வைத்தியர் சம்பளம், மருந்து முதலியன எல்லாமே கொடுக்கப்படுகிறது.

SRI A. A. RASHEED : Do the dispensaries run by the local bodies get any subsidy or grant from the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. They get a subsidy for the Medical Officer. The pay of the Medical Officer is borne by the Government.

SRI K. PONNIAN : சில தனிப்பட்ட டிஸ்பென்சரிகளில் ஹோமியோபதி டாக்டர்கள் அலபதி மெடிசினைக் கையாள்கிறார்கள். சர்க்கார் இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்கிறேன்.

THE HON SRI M. A. MANICKAVELU : ஹோமியோபதி முறை வேறு. அது இந்த ராஜ்யத்தில் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லையென்று நினைக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்துகிற ஆஸ்பத்திரிகளை சர்க்காரே எடுத்து நடத்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு வேறு திட்டம் இல்லை. பணம் அதிகரித்தால் செய்யலாம்.

---

[a] Printed as Appendix II on page 95 infra.